மே 17, 2019

**மூன்றாவது அமெரிக்கா-இலங்கை பங்காண்மை கலந்துரையாடல் பற்றிய கூட்டு அறிக்கை**

வொஷிங்டன் டீ.சீ.யில் 2019 ஆம் ஆண்டு மே 16 ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க-இலங்கை பங்காண்மை கலந்துரையாடல் தொடர்பாக அமெரிக்க மற்றும் இலங்கை அரசாங்கங்களினால் விடுக்கப்பட்ட அறிக்கை பின்வருமாறு:

ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சட்ட ஆட்சிக்கான உறுதிப்பாடொன்றை பகிர்ந்துக் கொண்டு அமெரிக்காவும் இலங்கையும் மூன்றாவது அமெரிக்க-இலங்கை பங்காண்மை கலந்துரையாடலை 2019 ஆம் ஆண்டு மே 16 ஆம் திகதி வாஷிங்டன் டீ.சீ.யில் நடத்தியிருந்தன. இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் அரசியல் விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் டேவிட் ஹேல் ஆகியோர் இந்த கூட்டத்திற்கு சம தலைமை வகித்தனர்.

சக ஜனநாயக நாடுகள் என்ற வகையில் பகிரப்பட்ட விழுமியங்களில் உறுதியாக வேரூன்றியிருக்கும் இருதரப்பு உறவுகளின் முக்கியத்துவத்தை இரு அரசாங்கங்களும் மீள உறுதிப்படுத்தியதுடன், பங்காண்மையை மேலும் வலுப்படுத்த ஒன்றுபட்டு செயற்படுவதற்கும் உறுதிபூண்டன.

பயங்கரவாதத்திற்கு எதிராக அமெரிக்கா இலங்கையுடன் உறுதுணையாக நிற்கும் என்பதுடன், ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத்திலான கொடூரமான பயங்கரவாத தாக்குதல்களை அடுத்து இலங்கையின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புகளையும் வழங்குகிறது என்ற ஜனாதிபதி ட்ரம்பின் அறிக்கையை அமெரிக்கா மீள் வலியுறுத்தியது. கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்தான பல்வகைப்பட்ட உதவிகள் மற்றும் சமஷ்டி விசாரணை பணியகத்தில் (FBI) இருந்தான விசாரணையாளர்கள் உள்ளிட்ட அமெரிக்காவின் ஒத்துழைப்புகளுக்கு இலங்கை அதனது நன்றிகளை தெரிவித்துக் கொண்டது. எதிர்கால உதவிகளுக்கு சாத்தியமான விடயதானங்கள் பற்றியும் இருதரப்பினரும் கலந்துரையாடினர். உயிர்த்த ஞாயிறன்று இலங்கை மீது தாக்குதல்களை நடத்திய பயங்கரவாதிகள் ஐ.எஸ்.ஐ.எஸ். இல் இருந்து உத்வேகம் பெற்றவர்களாக தெரிகிறது. இவ்வாறான சூழ்நிலையில், ஐ.எஸ்.ஐ.எஸ். ஐ தோற்கடிப்பதற்கான உலகளாவிய கூட்டணி பற்றி இலங்கைக்கு விளக்கமளிக்கப்பட்டது. இலங்கையுடன் பயங்கரவத எதிர்ப்பு மற்றும் கடல் பிராந்திய மற்றும் எல்லைப் பாதுகாப்பு ஒத்துழைப்பை தொடர்ந்தும் விஸ்தரிப்பதற்கு அமெரிக்க முன்வந்துள்ளது.

அமைதி மற்றும் பாதுகாப்பை பேணுவதற்கும் சர்வதேச சட்டங்கள் மற்றும் நியாதிகளுக்கான மதிப்பை உறுதிப்படுத்தும் சட்டங்களின் அடிப்படையிலான ஒழுங்கின் ஊடாக இந்து மற்றும் பசுபிக் சமுத்திரங்களில் பாதுகாப்பான கடற்பிராந்திய எல்லையொன்றை உறுதிப்படுத்துவற்கும் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு அமெரிக்காவும் இலங்கையும் தீர்மானித்துள்ளன. இந்த பின்னணியில், கடல்வழி போக்குவரத்து, வான்வழி பயணம் மற்றும் தடையில்லா வர்த்தகத்தின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் சுதந்திர, திறந்த மற்றும் வளமான இந்து-பசுபிக் பிராந்தியமொன்றை நோக்கிய அமெரிக்க உபாயமானது முக்கியமானதொரு முன்னெடுப்பாக அங்கீகரிக்கப்பட்டது. கடற்பிராந்திய பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்பு மற்றும் பரிமாற்றங்களை மேலும் ஊக்குவிப்பதற்கான நோக்கங்களையும் அவர்கள் பகிர்ந்துக் கொண்டதுடன், 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இலங்கையினால் நடத்தப்பட்ட இந்து சமுத்திர மாநாடு பற்றியும் திருப்தியை வெளியிட்டனர். அத்துடன், பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பரஸ்பர நன்மைகளின் நிமித்தமான பொருளாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான கூட்டு முன்முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுப்பது பற்றியும் உடன்பாடு கண்டனர்.

இலங்கை அதன் கடற்பரப்பில் கண்காணிப்புகளில் ஈடுபடுவதற்கான, கடத்தல்கள் மற்றும் ஏனைய சட்ட விரோத செயற்பாடுகளை தடுப்பதற்கான மற்றும் இந்து சமுத்திரத்தில் மனிதாபிமான உதவிகள் மற்றும் அனர்த்த பதிலளிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்திக் கொள்தவற்கான இலங்கையின் ஆற்றலை கட்டியெழுப்புவதிலான பரஸ்பர நலன்களை முன்னேற்றுவதற்கு அமெரிக்க எக்ஷஸ் டிபென்ஸ் ஆர்ட்டிகல்ஸ் நிகழ்ச்சித் திடத்தின் ஊடாக வழங்கப்பட்ட ஹாய் என்டூரன்ஸ் கட்டர் கப்பலின் வருகையை இலங்கை வரவேற்றது. கண்ணிவெடி அகற்றலுக்கான அமெரிக்காவின் ஒத்துழைப்பு, கூட்டு இராணுவ ஈடுபாடுகள், இலங்கையின் அமைதிகாக்கும் நடவடிக்கைகள், இலங்கை அதிகாரிகளுக்கான மனித உரிமைகள் பயிற்சிகள் மற்றும் அமெரிக்க கப்பல்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளின் விஜயங்கள் உட்பட இடம்பெற்றுவரும் இருதரப்பு பாதுகாப்புத் துறை ஒத்துழைப்புகளை இரு அரசாங்கங்களும் வரவேற்றன. இராணுவங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை விஸ்தரிப்பது தொடர்பில் அமெரிக்காவும் இலங்கையும் உடன்பாடு எட்டின.

நீடித்த சமாதானம் மற்றும் சுபீட்சத்துக்கான நோக்கத்தின் நிமித்தம் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், நீதி மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்கான இலங்கையின் புதுப்பிக்கப்பட்ட உறுதிப்பாடுகளை அமெரிக்க அரசாங்கம் வரவேற்றது. காணாமலாக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்தின் ஆணை, இழப்பீட்டுக்கான அலுவலகமொன்றை ஸ்தாபிப்பதற்கான சட்டமூலம் மற்றும் பாதுகாப்பு படையினரால் பயன்படுத்தப்பட்ட தனியார் காணிகளின் மீளளிப்பு உட்பட இந்த விடயங்களிலான முன்னேற்றத்தை அமெரிக்கா அங்கீகரித்தது.

ஜனநாயகம், ஜனநாயக நிறுவனங்கள் மற்றும் செயற்பாடுகள், நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி, நீதி மற்றும் பாராளுமன்ற நடைமுறைகளை பலப்படுத்துவதற்கான தமது உறுதிப்பாட்டை இலங்கை அரசாங்கம் வலியுத்தியது. இந்த உறுதிப்பாடுகளின் அமுலாக்கத்திலான வேகத்தை தக்கவைப்பதற்கு அமெரிக்க இலங்கையை ஊக்குவித்தது.

நேர்மை மற்றும் பரஸ்பர பரிமாற்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட உறுதியான பொருளாதார பங்காண்மை மற்றும் அதிகரிக்கும் இருதரப்பு வர்த்தகத்துக்கான ஆதரவை அமெரிக்காவும் இலங்கையும் வெளிப்படுத்தின. 480 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான ஒப்பந்தத்திற்கு மிலேனியம் செலேன்ஞ் கோர்பரேஷன் சபை அளித்த அங்கீகாரத்தையும் இருநாட்டு அரசாங்கங்களும் வரவேற்றன. இந்த ஒப்பந்த கைச்சாத்தானது அமெரிக்காவில் காங்கிரஸ் அனுமதிக்காகவும் இலங்கையில் அமைச்சரவை அனுமதிக்காகவும் நிலுவையில் உள்ளது.

அமெரிக்காவும் இலங்கையும் தங்களது இருதரப்பு உறவுகளின் முக்கியத்துவத்தை ஒன்றிணைந்து வலியுறுத்தியதுடன், பரஸ்பர நலன்களுக்கான அமெரிக்க-இலங்கை பங்காண்மையை மேலும் பலப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தின.